# கல்விப் பொதுத் தராதர சாதாரணதர மாணவர்களும் அறபுமொழிப் பாடமும்: பொத்துவில் பிரதேசத்தை மையப்படுத்திய ஓர் மதிப்பீட்டாய்வு

A.M.M. Hijas[1], A.R.M. Mahsoom[2] & M.H.A. Munas[3]

[1]Student, [2] Assistant lecturer, [3]Senior Lecturer
[1,2,3] Department of Arabic Language
Faculty of Islamic Studies and Arabic Language, South Eastern University of Sri Lanka
hijas392@gmail.com, mahsoomzahry92@gmail.com, mhamunas@seu.ac.lk

**ஆய்வுச் சுருக்கம்**

கல்வியே ஒரு சமூகத்தின் அடையாளம். கல்வி உருவாக்கும் மனிதர்களே நாளை அந்த சமூகத்தை ஆளும் தலைவர்களாக உருவாகிறார்கள். மாணவர்களது கல்விமட்டத்தை அளவிட இலங்கை அரசினால் நடாத்தப்படும் தேசிய பரீட்சைகளின் வரிசையில் கல்விப் பொது தராதர சாதாரணதர பரீட்சை மிக முக்கியமானதாகும். பாடசாலை மாணவர்கள் கல்விப் பொது தராதர சாதாரணதர பரீட்சையில் அரபுமொழிப் பாடத்தைத் தேர்வு செய்யாமைக்கான காரணிகளைக் கண்டறிதல் என்ற நோக்கில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. குறித்த பாடத்தைத் தெரிவு செய்வதற்காக சகல நியாயங்களும் காணப்பட்ட போதிலும் மாணவர்கள் இப்பாடத்தைத் தெரிவு செய்யாமையானது இவ்வாய்வின் பின்னணியாகவும், பிரச்சினையாகவும் கருதப்பட்டது. இவ்வாய்வின் முதலாம் நிலை தரவுகளாக வினாக்கொத்து, கலந்துரையாடல், நேர்காணல் ஆகிய மூலங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இரண்டாம் நிலை தரவுகள் ஆய்வின் தேவைகளுக்கேற்ப புத்தகங்கள், இடாப்பு பதிவுகள், பதிவேடுகள் என பல்வேறு நூல்களிலிருந்தும் பெறப்பட்டன. இந்த சமூகவியல் பண்புசார் ஆய்வானது SPSS, EXCEL முறைகளின் ஊடாக தரவுகளை பகுப்பாய்வு செய்து மாணவர்களின் பாடம் குறித்த பயம், அறிமுகமின்மை, வழிகாட்டலின்மை என்பன குறித்த பாடத்தை தெரிவு செய்யாமைக்கான காரணிகளாக இவ்வாய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. அறிமுக நிகழ்வு(Orientation), வழிகாட்டல், தரம் ஆறு முதல் குறித்த பாடத்தினை உள்வாங்குதல் ஆகியன ஆய்வின் பரிந்துரைகளாக சிபாரிசு செய்யப்பட்டன.

**திறவுச் சொற்கள்:** கல்விப் பொதுத் தராதர சாதாரண தரம், அறபுமொழி, பாடத் தெரிவு

## ஆய்வு அறிமுகம்

மூன்றாம் உலக நாடுகளில் கல்வி அபிவிருத்தி என்ற அடிப்படையில் இலங்கை முன்னணி வகிக்கின்ற அதேவேளை ஒப்பீட்டு ரீதியில் எழுத்தறிவு (97.3 %), பாடசாலை செல்வோர் (99%), உயர்கல்வியைத் தொடர்வோரின் எண்ணிக்கை போன்ற கல்விக் குறிகாட்டி சுட்டிகள் உயர்நிலையில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. கல்வி ரீதியாக மிக நீண்ட பாரம்பரியத்தை கொண்ட நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். சுதேச கல்வி முறை, மேலைத்தேய கல்விமுறை(1931) , கட்டாயக் கல்வி (1945) , தாய்மொழியான இலவசக்கல்வி (1998), மாணவர் மயப்படுத்தப்பட்ட கல்வி, 18 வயது வரையான கட்டாயக்கல்வி என கல்வியின் வளர்ச்சிவீச்சு இலங்கை போன்ற வளர்முக நாடுகளில் சாதகமான விளைவுகளை ஏற்படுத்தின என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

அத்தகைய கல்விப் பின்னணியைக் கொண்ட இலங்கை நாட்டின் மாணவர்களது வளர்ச்சி மட்டங்களை மதிப்பீடுசெய்ய பல்வேறு விதங்களில் முயற்சிகள் செய்யப்பட்ட போதிலும் எழுத்து பரீட்சைக்கு தனியான ஓர் இடம் உண்டு. சிறுவர் பாடசாலை, பல்கலைக்கழகம், தொழில் வாய்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன பரீட்சை என்ற தடைதாண்டலின் வழியேதான் சாத்திய, அசாத்தியப்படுகின்றன. அது ஆரோக்கியமானதா என்ற வாதங்களையும் தாண்டிய ஓர் பாரிய செல்வாக்கினை பெற்றிருக்கிறது.

தேசிய ரீதியாக இலங்கை அரசு நடத்தும் பரீட்சைகளில் கல்விப் பொதுத் தராதர சாதாரணதர பரீட்சை உயர்கல்வியைத் தொடர்வதற்கான ஓர் அடிப்படையாகக் கொள்ளப்படுகிறது என்ற வகையில் முக்கிய தடைதாண்டலாகும்.

கல்விப் பொதுத் தராதர சாதாரணதர மாணவர்கள் தரம் 10ஆம் ஆண்டில் பரீட்சைக்கு தோற்றும் பாடங்களைத் தெரிவு செய்து இரண்டு வருடங்கள் அதற்காக தயாராகின்றனர் என்பது யாவரும் அறிந்ததே. குறித்த மாணவர்கள் தங்களது பாடங்களை தெரிவு செய்வதில் பன்முகத் தன்மை கொண்டவர்களாக காணப்படுகின்றனர். குறித்த பரீட்சாத்தி சமயம் சார் பாடங்களில் ஒன்றினையும், சிங்கள / தமிழ் மொழி இலக்கியம், ஆங்கில மொழி, கணிதம், வரலாறு, விஞ்ஞானம் என 6 பாடங்களை தெரிவு செய்ய வேண்டியது கட்டாயமாகும். ஏனைய மூன்று தெரிவுப் பாடங்களையும் 3 பாட தொகுதிகளிலிருந்து தெரிவு செய்து கொள்ளலாம். முதலாம் பாடத் தொகுதி, இரண்டாம்

பாடத் தொகுதி, மூன்றாம் பாட தொகுதி என மூன்று தொகுதிகளிலிருந்தும் ஒரு பாடம் வீதம் பாடங்களை தெரிவு செய்யும் சுதந்திரம் மாணவர்களுக்கு பூரணமாக வழங்கப்பட்டுள்ளது.

| **முதலாம் பாடத் தொகுதி** | **இரண்டாம் பாடத் தொகுதி** | **மூன்றாம் பாட தொகுதி** |
|---|---|---|
| வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் | சங்கீதம் (கீழைத் தேயம், மேலைத் தேயம், கர்நாடகம்) | தொழிநுட்பவியல் (தகவல் தொடர்பாடல், விவசாயமும் உணவும், கடற்றொழிலும் உணவும், ஆக்கத்திறன்) |
| புவியியல் | சித்திரம் | நுண்கலை |
| குடியுரிமைக் கல்வி மற்றும் சமூக நிர்வாகம் | நடனம் (சுதேச, பரதம்) | மனைப் பொருளியல் |
| முயற்சியாண்மைக் கற்கை | இலக்கிய நயம் (ஆங்கிலம், சிங்களம் தமிழ், அரபு) | சுகாதாரமும் உடற்கல்வியும் |
| இரண்டாம் மொழி (தமிழ்/சிங்களம்) | நாடகமும் அரங்கியலும் (சிங்களம், தமிழ், ஆங்கிலம்) | தொடர்பாடல் ஊடகக் கல்வி |
| மூன்றாம் மொழி (பாளி, சமஷ்கிரதம், ஹிந்தி, ஜேர்மன், ஜப்பான், அரபு) | -----------------------[180] | மின் ஆவணப்படுத்தலும் சுருக்கெழுத்தும் (சிங்களம், தமிழ், ஆங்கிலம்) |

அந்தவகையில் அரபுமொழி பாடத்தினை தெரிவுசெய்யும் மாணவர்கள் இலங்கை பூராகவும் காணப்படுவதுடன் அதற்கான பாடத்திட்டம் அது சார் துறை அறிஞர்களால் வரையப்பட்டுள்ளன. குறித்த பாடத்தை பொத்துவில் பிரதேச மாணவர்கள் வருடம் தோறும் தெரிவு செய்து வந்தபோதிலும் இம்முறை அப்பாடத்தினை தெரிவு செய்வதில் அதீத பின்தங்கிய நிலை ஆய்வாளர்களினால் அவதானிக்கப்பட்டது. எனவே குறித்த பிரதேச பாடசாலைகளில் ஏன் இந்த நிலை ஏற்பட்டுள்ளது என்பதனை மையப்படுத்தியதாக இவ்வாய்வு அமைகிறது.

### ஆய்வுப்பிரதேசம்

இலங்கை தேசத்திலே இதுவரை 98 கல்வி வலயங்கள் உள்ளன. பொத்துவில் அக்கரைப்பற்று வளையத்தின் ஒரு உப வளையமாக இயங்கி வருகிறது பொத்துவில் வளையத்தில் 23 அரச பாடசாலைகள் உள்ளன.

### ஆய்வுப்பிரச்சினை

அரபு மொழியினையும் ஓர் பாடமாக இலங்கை அரசு கல்விக் கொள்கையில் இணைத்துக்கொண்டு, குறித்த பாடத்திற்கான பாடத்திட்டங்கள், ஆசிரியர் கையேடுகள் என பல்வேறு அம்சங்கள் துறைசார் அறிஞர்களால் வரையப்பட்டு, ஒழுங்கமைக்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதுடன், அரபுமொழி பாடத்திற்காக இலங்கை அரசு தனியாகவே ஆசிரியர் நியமனங்களை வழங்கி, குறித்த பாடத்தை தெரிவு செய்வதில் பொத்துவில் பிரதேச மாணவர்கள் ஆர்வமானவர்களாக இருந்தபோதிலும் நடப்பு வருட மாணவர்கள் அரபு மொழி பாடத்தினை தெரிவு செய்வதில் மந்த நிலை ஆய்வாளர்களினால் அவதானிக்கப்பட்டது. இதற்கான காரணம் என்ன, குறித்த காரணங்களில் செல்வாக்குச் செலுத்தும் அம்சங்கள் யாவை போன்ற கேள்விகளை மையம் கொண்டதாகவே இவ்வாய்வு பிரச்சினையும் பின்னணியும் அமைந்துள்ளது.

### ஆய்வின் நோக்கங்கள்

1. பாடசாலை மாணவர்கள் நடப்பு ஆண்டில் (2019) கல்விப் பொதுத் தராதர சாதாரண தர கற்கைக்கு அறபு மொழிப் பாடத்தினை தேர்ந்தெடுக்காமைக்கான காரணிகளைக் கண்டறிதல்.

2. குறித்த காரணங்களில் அதிக செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை அடையாளப்படுத்தல்.

### ஆய்வின் முக்கியத்துவம்

சர்வதேச மட்டத்தில் கல்விக்குக் கொடுக்கும் முக்கியத்துவம் யாவரும் அறிந்ததே. அந்த அறிவைப் பெற்றுக் கொள்வது மாணவர்களது உரிமையாகும். இவ்வுரிமையை பெற்றுக் கொடுக்க வேண்டியது

சமூகத்தின் மீதான கடமையாகும். குறித்த ஆய்வுப்பிரதேச மாணவர்களது குறித்த பாடம் தொடர்பாக இதற்கு முன்னர் எந்தவெரு ஆய்வுகளும் மேற்கொள்ளப்படவில்லை என்பதாலும் இவ்வாய்வின் கலந்துரையாடல் மூலம் குறித்த பிரதேச கற்றல் கற்பித்தல் விடயங்களில் முன்னேற்றத்திற்கு இவ்வாய்வானது பெரிதும் உதவும் என்ற ரீதியிலும் முக்கியத்துவம் பெறுகின்றது.

### ஆய்வு முறையியல்

குறித்த பிரதேசத்திலுள்ள பாடசாலைகளில் கல்விகற்கும் தரம் 10, சாதாரண தர மாணவர்களது தரவுகளைப் பெற்றுக் கொள்ள உப-வலையக்கல்விப் பணிப்பாளர், பாடசாலை நிர்வாகம், அதிபர், ஆசிரியர்கள், தரம் 10,11 இல் கல்வியைத் தொடரும் மாணவர்கள் ஆகியோரிடம் நேர்காணல், வினாக்கொத்து, கலந்துரையாடல் மற்றும் தொலைபேசித் தொடர்புகள் ஆகிய முதலாம் நிலைத் தரவுகள் மூலம் ஆய்வு மேற் கொள்ளப்பட்டுள்ளது. இரண்டாம் நிலை தரவுகளாக குறித்த பிரதேசத்திலுள்ள பாடசாலைகள் குறித்த ஆவணங்களையும், தகவல்களையும் பெற்றுக் கொள்வதற்காக பாடசாலைக் கைநூல்கள், சிறப்பு மலர்கள் மற்றும் மொழிப் பாடங்களில் மாணவர்களின் பின்னடைவுகள் தொடர்பாக முன்வைக்கப்பட்ட ஆய்வுகள் மற்றும் இதர தகவல்கள் இணையதளம் ஆகியவற்றினூடாக திரட்டப்பட்டுள்ளன.

### ஆய்வின் எல்லை.

- ❖ தலைப்பு எல்லை: கல்விப் பொதுத் தராதர சதாரண தர மாணவர்களும் அறபு மொழிப் பாடமும்.
- ❖ பிரதேச எல்லை: பொத்துவில் (உப-வலயம்)
- ❖ ஆள் எல்லை: கல்விப் பொதுத் தராதர சாதாரண தர மாணவர்கள்.

### இலக்கிய மீளாய்வு

கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட இதுதொடர்பான ஆய்வுகளை தேடலுக்கு உட்படுத்திய போது அரபு மொழிப் பாடம் சம்பந்தமாக ஆய்வுகள் செய்யப்படாமை இனங் காணப்பட்டதுடன் தலைப்புடன் தொடர்புபட்ட நூல்கள், கட்டுரைகள், சஞ்சிகைகள், வாழ்வியற் களஞ்சியங்கள், குறிப்புகள், சுற்றறிக்கைகள் மற்றும் பல்வேறு ஆவணங்கள் என அனைத்து வெளியீடுகளும் இலக்கிய மீளாய்வுக்குட்படுத்தப்பட்டது.

கல்வி இன்று பிள்ளைகளின் உரிமையாக வலியுறுத்தப்படுகிறது. வளர்முக நாடுகளில் அரசியல் சட்டங்கள் மற்றும் கல்வி சட்டங்கள் இதுதொடர்பாக வலியுறுத்தியுள்ளது

சோ 2004 "கல்வி ஒரு பன்முக நோக்கு." உமா பதிப்பகம்

சமீம் எம் ஏ எம் "Level of English language proficiency among rural and urban based learners in Sri Lanka" என்ற தலைப்பில் இலங்கையில் பாடசாலை மாணவர்களின் ஆங்கில மொழி தொடர்பாக இவ்வாய்வு மொழித் திறன் மதிப்பீடு மற்றும் ஆங்கில மொழி பாட கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் கடந்த போரின் தாக்கம் சம்பந்தமான கண்டறிதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

"Zimbabwe school examination council, English language" என்ற தலைப்பில் மொழிப் பாடம் கற்பிக்கும் முறைமை மற்றும் ஆசிரியர் கற்பிக்கும் போது கேட்டல் பேசுதல் வாசித்தல் எழுதுதள் போன்ற யுக்திகளை கையாளல் போன்ற விடயங்கள் முன்வைக்கப்பட்டுள்ளது இவ் ஆய்வானது ஆங்கில மொழிப் பாடத்தினையும், கல்வி பொதுத் தராதர சாதாரண தர மாணவர்களது பாடப் பரப்பையும் மையப்படுத்தியதாக அமைந்துள்ளது.

"Fathima Farasa. The decrease of results in English language of GCE OL students: A study based on certain schools in sammanthurai educational division"

என்ற தலைப்பில் பாடசாலை மாணவர்கள் ஆங்கில மொழிப் பாடத்தில் குறைந்த புள்ளிகள் எடுப்பதற்கான காரணங்கள் சம்பந்தமாக ஆராய்ந்துள்ளதுடன் இரண்டாம் மொழியாகக் கற்பிக்கப்படும் பாடங்கள் நவீன கற்பித்தல் நுட்பங்களைக் கையாண்டு வழங்கப்பட வேண்டும் என்ற முன்வைப்புக்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**கலந்துரையாடலும் பெறுபேறுகளும்**

**1. நோக்கம்-1**

**பாடசாலை மாணவர்கள் நடப்பு ஆண்டில் (2019) கல்விப் பொதுத் தராதர சாதாரண தர கற்கைக்கு அறபு மொழிப் பாடத்தினை தேர்ந்தெடுக்காமைக்கான காரணிகளைக் கண்டறிதல்.**

1.1. கடந்த ஆண்டுகளில் குறித்த பாடத்தினைத் தெரிவு செய்த மாணவர்களது எண்ணிக்கை பின்வரும் வரைபடம் மூலம் காட்டப்படுகிறது

| Year | NO.Of SAT | NO.OF PASS | PERFORMANCE INDICATOR | | | | | PASS |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | A | B | C | S | F | % |
| 2014 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0.00 |
| 2015 | 3 | 3 | 1 | 1 | 1 | 0 | 0 | 100.00 |
| 2016 | 6 | 6 | 1 | 4 | 1 | 0 | 0 | 100.00 |
| 2017 | 9 | 7 | 2 | 3 | 1 | 1 | 2 | 77.78 |
| 2018 | 5 | 5 | 0 | 1 | 3 | 1 | 0 | 100 |







இந்த அட்டவணைகளின்படி 2015 - 2018 வரையான காலப்பகுதியில் வருட அடிப்படையில 23 மாணவர்கள் குறித்த பாடத்தைத் தெரிவு செய்துள்ளனர். ஆனால் நடப்பு (2019) வருடத்தில் பரீட்சைக்கு தோற்ற இருக்கும் எந்த ஒரு பரீட்சாத்தியும் குறித்த பாடத்தைத் தெரிவு செய்யாமை அமர்முடுகளான நிலையை சுட்டிக்காட்டுகிறது.

1.2. குறித்த பாடத்தை நடப்பு வருடத்தில் தேர்வு செய்யாமைக்கான காரணங்களை கண்டறியும் நோக்கில் மாணவர்களிடம் கொடுக்கப்பட்ட வினாக்கொத்து பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டபோது பின்வரும் அம்சங்கள் அடையாளப்படுத்தப்பட்டன.

❖ **கண்டறியப்பட்ட காரணங்கள்:**

- ➢ வழிகாட்டலின்மை
- ➢ ஆசிரியர் பற்றாக்குறை
- ➢ முறையான பாடத்திட்டமின்மை
- ➢ காலம் போதாமை
- ➢ பாடம்பற்றிய அறிமுகமின்மை
- ➢ முன்அறிமுகமின்மை
- ➢ தொழில் வாழ்க்கைக்கு பொருந்தாமை

**2. நோக்கம்-2**

**குறித்த காரணங்களில் அதிக செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை அடையாளப்படுத்தல்.**

**2.1** கண்டறியப்பட்ட காரணங்களில் அதிக செல்வாக்குச் செலுத்தும் காரணிகளாக

**Name**

| | | Frequency | Percent | Valid Percent | Cumulative Percent |
|---|---|---|---|---|---|
| Valid | Lack of Guidance | 1 | 25.0 | 25.0 | 25.0 |
| | Lack of Interesting | 1 | 25.0 | 25.0 | 50.0 |
| | Lack of Proper Syllabus | 1 | 25.0 | 25.0 | 75.0 |
| | Shortage of Teacher | 1 | 25.0 | 25.0 | 100.0 |
| | Total | 4 | 100.0 | 100.0 | |

பின்வருவன அடையாளப்படுத்தப்பட்டன:

- வழிகாட்டலின்மை
- ஆசிரியர் பற்றாக்குறை
- முறையான பாடத்திட்டமின்மை
- காலம் போதாமை

**2.2** அடையாளப்படுத்தப்பட்ட காரணங்களை ஆய்வுப்பிரதேசமான மூன்று பாடசாலைகளிலும் வினாக்கொத்துக்கள் மூலம் தகவல்கள் திரட்டப்பட்ட போது பின்வரும் பெறுபேறுகள் கண்டறியப்பட்டுள்ளன.




குறித்த காரணங்களை மொத்தமாக பகுப்பாய்விற்கு உற்படுத்தப்பட்ட போது பின்வருமாறு கண்டறியப்பட்டுள்ளது.




“வழிகாட்டலின்மை” என்பது அதிகம் தாக்கம் செலுத்துவதாக கண்டறியப்பட்டுள்ளது. வினாக்கொத்தின் அடிப்படையில் 38 வீதமான மாணவர்கள் “வழிகாட்டலின்மை” என அடையாளப்படுத்தியுள்ளதோடு “ஆசியர் பற்றாக்குறை” என்பதை 34 வீதமான மாணவர்களும், “முறையான பாடத்திட்டமின்மை” என 28 வீதமானவர்களும் “காலம் போதாமை” என 8 வீதமானவர்களும் அடையாளப்படுத்தியுள்ளனர்.

**ஆசிரியர்கள் முன்வைத்த காரணிகள்**

- ❖இடப்பற்றாக்குறை
- ❖ஆசிரியர் நியமனப் பற்றாக்குறை
- ❖நேரம் போதாமை
- ❖மாணவர்களது ஒத்துழைப்பின்மை

ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களிடம் கொடுக்கப்பட்ட வினாக்கொத்துக்களில் **"இப்பாடம் எவ்வாறு அமைந்தால் எதிர்காலத்தில் மாணவர்களால் தேர்ந்தெடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது?"** என்ற திறந்த வினாவிற்கு மூன்று பாடசாலைகளிலும் அடங்கலாக 5 ஆசிரியர்களும் 64 வீதமான மாணவர்களும் வேறுபட்ட சொற்பிரயோகங்களால் குறிப்பிட்ட விடயங்களின் இரு மையக்கருத்துக்கள் வெளிப்பட்டுள்ளன.

- ✓ கால எல்லை போதாமையினால் பெறுபேறுகளின் அடைவுமட்டம் பற்றிய ஐயம்.

- ✓ தரம் ஐந்து, ஆறு மற்றும் ஏழு போன்ற வகுப்புக்களிலிருந்து குறித்த பாடம் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

**முடிவுரை**

எனவே ஆய்வுப் பிரதேசத்தில் அரபு மொழியினை தெரிவு செய்யாமைக்கான காரணங்கள் ஆய்வாளர்களால் மிகத்துல்லியமாக அவதானிக்கப்பட்டு பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளன. அரபு மொழியை ஒரு பாடமாக தெரிவு செய்வதன் ஊடாக அதன் இருப்பையும் எதிர்காலத்தையும் பாதுகாத்துக் கொள்வதற்கான மும்மொழிவுகள் ஆய்வாளர்களால் முன்வைக்கப்படுகின்றன.

**முன்மொழிவுகள்**

- ➢ (Orientation) பாட அறிமுக நிகழ்வினை ஏற்பாடு செய்வதின் ஊடாக "**வழிகாட்டலின்மை**", "**தொழில் வாழ்க்கை**", "**முன் அறிமுகமின்மை**" போன்ற பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியும்.
- ➢ இது ஓர் மொழிப்பாடமாக இருப்பதனால் மொழிப்பாடத்திற்கான சட்டதிட்டங்களை இப்பாடத்திலும் அமுலாக்கல்.
    - தரம்-6 இலிருந்து குறித்தபாடத்தினை பாடவிதானத்தில் சேர்த்தல்.
    - குறிப்பிட்டகாலம் வரை கட்டாயப் பாடமாக போதித்தல்.
- ➢ ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கான அறபு மொழிப்பாட ஆசிரியர் நியமணம் வழங்கப்படல்.
- ➢ குறித்த பாடம் தொடர்பான தெளிவினை வழங்குவதற்கு ஆசிரியர்குலாம் முன்வரல்.

## References

ஹஸ்புல்லாஹ், எஸ்.எச், சைபுதின், என்.பி.எம். (1994) "இலங்கை முஸ்லிம் கல்வி: பெண் கல்வியும், உயர்கல்வியும்".

சந்திரசேகரன், சோ. (2004).கல்வி ஒரு பன்முக நோக்கு. உம பதிப்பகம்:கொழும்பு-6.

மலையக பாடசாலையும் மாணவர் இடைவிலகளும். (ப.்.கொஸ்லந ்தை ஸ்ரீ கணேஷா தமிழ் மகாவித்தியாலயத ்தை மையமாக கொண்ட ஆய்வு) ம. திபாகரன் இலங்கை தென்கிழக ்குப் பல ்கலைக்கழகம் 2016